


ஆளுநர் தன்னிச்சையாகவே செயல்படுகிறார்! தமிழ்மொழி மீது அக்கறை இருந்தால்

# மும்மொழிக் கொள்கையை எதிர்க்கத் தயாரா?

## அண்ணாமலைக்கு அமைச்சர் க.பொன்முடி காட்டமான பதிலடி!

**விழுப்புரம், மே 28 - "மும்மொழிக் கொள்கையை அண்ணாமலை எதிர்க்கத் தயாரா? நான் நேருக்கு நேர் விவாதிக்கத் தயார்!" என்று அமைச்சர் க.பொன்முடி தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணா மலைக்கு சவால் விடுத்துள்ளார்.**

**இது குறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு:-**



பா.ஜ.க. அண்ணாமலை அவர்களை நான் நேரடியாக கேட்கிறேன். தமிழ் வளர்ச்சிக்கு யார் காரணம்? மும்மொழிக் கொள்கையை அவர் எதிர்க்கத் தயாரா? அவர் சென்னையில் எந்த இடத்தில் சொல்கிறாரோ அதே இடத்தில் நேருக்கு நேர் விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன் அதை பொதுக்கூட்டமாகவோ இல்லை பட்டிமன்றமாகவோ வைத்து பேசுவதற்கு நான் தயாராக இருக்கி றேன் . அவர் தயாரா எனக் கேட்டுச் சொல்லுங்கள் .

அண்ணா பல்கலைக்கழகத்தில் தமிழ் வழி கல்வி நிறுத்தப்பட்டுள்ளது அது அரசாங்கத்திற்கு தெரியாதா? என கேள்வி எழுப்பினார். உண்மையாகவே அரசாங்கத்துக்கு தெரியாது. ஆளுநருக்கு தான் தெரியும். அவர்தான் ஆளுநர் உடன் மிக நெருக்கமாக இருக்கிறாரே அவரே கேட்டு சொல்லட்டும் துணைவேந்தர்கள் எல்லாம் அழைத்து கூட்டம் போட்டுள்ளார் ஆளுநர், ஆனால் நான் இணைவேந்தராக இருக்கிறேன் எனக்கு எந்தவித தகவலும் அளிக்கவில்லை. ஏன் அளிக்க வில்லை என அண்ணாமலை ஆளுநரை கேட்டு சொல்லட்டும். ஆளுநருக்கு அவர்தான் மிக நெருக்கமானவர். அவரைக் கேட்டு சொல்லட்டும்.

உண்மையாகவே அந்த கூட்டத்திற்கு எனக்கும் தகவல் வரவில்லை, உயர்கல்வி துறை செயலர் அவர்களுக்கும் தகவல் வரவில்லை. ஆளுநர் எப்போதும் தன்னிச்சையாகவே செயல்படுகிறார். அது எனக்கு மட்டுமல்ல; செய்தியாளர்களாகிய உங்களுக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும். துணைவேந்த ர்களுக்கான கூட்டம் சுற்றறிக்கை மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. அந்த சுற்றறிக்கை இணைவேந்தராக இருக்கும் எனக்கும் வரவில்லை. உயர் கல்வித் துறையின் செயல ருக்கும் வரவில்லை. அண்ணாமலை கேட்கிறாரே இதெல்லாம் அரசாங்கத் தெரியாமலா நடக்கிறது, உண்மை இதெல்லாம் அரசாங்கத்திற்கு தெரியாமல்தான் நடக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் மாநில கல்விக் கொள்கை குறித்து ஒரு குழு அமைத்துள்ளார் அந்த குழுவின் அறிக்கை விரைவில் வரவிருக்கிறது. இதனை கவனத்தில் கொண்டு ஆளுநர் அவர்கள் துணை வேந்தர்களை அழைத்து புதிய கல்விக் கொள்கை குறித்து அவர்களுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

தமிழக அரசை கலக்காமல் இவ்வாறு கூட்டம் போடுவது யார்? எதற்காக? என்று அண்ணாமலைக்கு தெரியாதா அவர்தான் மிக ஆளுநர் உடன் மிக நெருக்கமாக இருக்கிறார். அண்ணாமலை அவர்களுக்கு கரண்ட் பாலிடிக்சும் தெரியவில்லை, பழைய வரலாறும் தெரியவில்லை. இவர் எப்படி ஐபிஎஸ் ஆனார் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

திமுக எம்எல்ஏ பரந்தாமன் சிண்டிகேட் உறுப்பினராக இருக்கிறாரே அவர் மூலமாக இவர்களுக்கு தெரிந்திருக்கலாமே என அண்ணாமலை கேள்வி எழுப்பினார். ஏங்க ஒரு ஐ.பி.எஸ் அதிகாரியாக இருந்திருக்காரு இது கூட அவருக்கு தெரியலையே கடைசி சிண்டிகேட் கூட்டம் 20 ஏப்ரல் அன்று நடத்தப்பட்டது. அதில் கூட இவை ஒரு பொருளாக வைத்து கூட்டம் நடத்தப்பட வில்லை.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு அண்ணாமலை ரொம்ப பாடு படுவது போல் அறிக்கை விடுத்துள்ளார். அவர் போய் புதிய கல்விக் கொள்கையில் மூன்றா வது மொழி திணிப்பதை நிறுத்த வேண்டுமென ஆளுநரிடம் முறையிடட்டும். தமிழ் வளர்ச்சிக்கு திராவிட மாடல் ஆட்சிதான் காரணம். கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதும், அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராவதும் யாரால் நடந்தது. திராவிட மாடல் ஆட்சிதான் என அண்ணாமலைக்கு தெரியாதா? வரலாறை அவர் சரியாக தெரிந்து கொண்டு பேச வேண்டும். அண்ணாமலைக்கு மிகவும் தமிழ் மொழி மீது அக்கறை இருந்தால் கோவில்களில் போய் தமிழில் அர்ச்சனை செய்யுங்கள் என அனைத்து கோயில்களிலும் போய் சொல்லட்டும். அந்த காலத்திலிருந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கும் மொழி போரை முன்னெடுத்துச் சென்றது தி.மு.க. மற்றும் திராவிட மாடல் ஆட்சி தான். சி.பி.எஸ்.இ படிப்புகளில் தமிழ் மொழியை கட்டாயமாக சொல்லுங்கள் அப்படி ஆக்கினால் தமிழ் மொழி மீது இவர்களுக்கு அக்கறை உள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். தமிழ் மொழியை சி.பி.எஸ்.இ படிப்புகளில் விருப்ப பாடமாகத்தான் தான் வைத்துள்ளார்கள்.

புதிய கல்விக் கொள்கையில் உள்ள நல்லவற்றை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். ஆனால் மூன்றாவது ஒரு மொழியை கட்டாயமாக்கி திணிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசுக்கு தெரியாமல்தான் பல்கலைக்கழகங்கள் சில முடிவுகளை எடுக்கின்றன புதிய கல்விக் கொள்கையில் மூன்றாவது, ஐந்தாவது, எட்டாவது போன்ற வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு என்று உள்ளது, அப்படி பொதுத் தேர்வு எழுதினால் மாணவர்கள் அடுத்த கட்ட படிப்புகளுக்கு செல்லாமல் இடைநிற்றல் அதிகமாகும். இப்படிப்பட்ட கொள்கைகளை நாங்கள் எதிர்க்கிறோம் .

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் படிக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் எனவும் தற்போது முதலமைச்சர் அவர்கள் சிங்கப்பூர் , ஜப்பான் போன்ற நாடுகளில் சென்று பன்னாட்டுக் கல்வியை வளர்க்க வேண்டும், தொழில் துறையை வளர்க்க வேண்டும் என முதலீட்டாளர்களை சந்தித்து வருகிறார். மற்ற மொழிகளை படிப்பதை நாங்கள் எப்போதும் வேண்டாம் என்று சொல்வதில்லை. அந்த மூன்றாவது மொழி திணிப்பதைதான் நாங்கள் எதிர்க்கிறோம் தமிழ் மொழி வளர்ச்சிக்கு வித்திட்டவர் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், அவர் வழியில் தற்போது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறார்.

நீங்கள் இந்தி மொழியை கட்டாய மொழியாக திணிக்க முடியாது. புதிய கல்விக் கொள்கை திட்டத்தில் தமிழ் மொழிக்காக நாங்கள் பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தோம் என்று அண்ணாமலை அவர்கள் தெரிவித்துள்ளார். என்ன கொண்டு வந்துள்ளார் என்பதை நான் அவரோடு நேரடியாக விவாதிக்க தயார். அவரும் தயாரா? சென்னையில் சொல்லுங்கள் எந்த இடமாக இருந்தாலும் சொல்லுங்கள் அது பட்டிமன்றம் ஆகவோ அல்லதுபொதுக்கூட்டமாகவோ நான் அவரோடு விவாதிக்க தயார்.

இவ்வாறு உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்.

